**சுருக்கம்**

பணியமைப்பு – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – திரு.M.A.மோகன், தட்டச்சர் (ஓய்வு), குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், தஞ்சாவூர் (நகரம்), தஞ்சாவூர் மாவட்டம் – 04.03.1992 முதல் 10.04.1997 வரையில் எடுத்துள்ள 1864 நாட்கள் தொடர் விடுப்புகளை வரன்முறைப்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந–1) துறை**

அரசாணை (ப) எண்.96 நாள் 30.06.2021

பிலவ, ஆனி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டன:–

சமூக நல ஆணையரின் கடிதம் ந.க.எண்.22181/நிரு4(4)/2018, நாள் 22.03.2019 மற்றும் 04.09.2020.

______

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர்(நகரம்) குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் தட்டச்சராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.M.A.மோகன் என்பவர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, தஞ்சாவூர் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் தட்டச்சராகப் பணிநியமனம் பெற்று 11.10.1985 பிற்பகல் முதல் பணிபுரிந்து வந்துள்ளார் என்றும், தனியருக்கு தட்டச்சர் பதவியில் 11.10.1985 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும், 05.12.1987 பிற்பகல் முதல் தகுதிகாண்பருவம் நிறைவு செய்தும் ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும், தனியர் 04.03.1992 முதல் 10.04.1997 வரை நீண்ட காலமாக விடுப்பில் இருந்தார் என்றும், விடுப்புக்கு பிறகு தனியருக்கு திருச்சி மாவட்ட மறுவாழ்வு அலுவலகத்திற்கு பணியிடம் அளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும், தனியர் நீண்ட காலம் பணிக்கு வராமல் இருந்ததைத் தொடர்ந்து, தனியர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(b)–ன் கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது என்றும், தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி சமூக நல இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.15722/நிர்4(3)/1997, நாள் 10.05.2000–ல் தனியர் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை தொடர்பான நடவடிக்கைகள் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(b)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட உள்ளதன் அடிப்படையில் விலக்கிக்

கொள்ளப்பட்டன என்றும், மேற்சொன்னவாறு தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(b)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் அதற்குப் பின்னர் தொடர் நடவடிக்கை ஏதும் தனியர் மீது மேற்கொள்ளப்படவில்லை என்றும், திரு.M.A.மோகன் என்பவர் உறுதிமொழி பத்திரம்-1ல் ஊதியமில்லா விடுப்பாக அனுமதிக்கப்படும் நாட்களுக்கு பின்னாளில் ஊதியம் கோரப்படமாட்டாது என்றும், ஊதியமில்லா விடுப்பு நாட்களை கணக்கிடும்பொழுது ஏதேனும் விடுதல் கண்டுபிடிக்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்வதாகவும் உறுதி அளித்துள்ளார் என்றும், உறுதிமொழிப் பத்திரம்-2ல் தனியர் அத்தியாவசியக் காரணங்களுக்காக 01.08.1988 முதல் 11.05.1989 வரையிலும், 04.03.1992 முதல் 10.04.1997 வரையிலும் சம்பளமில்லா விடுப்பில் இருந்ததாகவும், தனியரின் குடும்ப பிரச்சனையில் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக ஊதியமில்லா விடுப்பில் இருந்ததாகவும் தனியர் தெரிவித்துள்ளார் என்றும், தனியர் அளித்துள்ள இரண்டு உறுதிமொழி பத்திர நகலை இணைத்து அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்து, தனியர் தட்டச்சராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்று இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தனியர் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பலன்கள் பெற ஏதுவாக ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி தனியரின் 3127 விடுப்பு நாட்களில் 2687 நாட்களை ஊதியமில்லா விடுப்பாகவும், 296 நாட்களை (240 நாட்கள் ஈட்டிய விடுப்பு + 56 நாட்கள் ஊதியமில்லா விடுப்பு) ஈட்டிய விடுப்பாகவும், 133 நாட்களை மருத்துவ விடுப்பாகவும், 11 நாட்களை பின் இணைப்பு விடுப்பாகவும் கருதி வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு சமூக நல ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. சமூக நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் அரசு பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர், திரு.M.A.மோகன், தட்டச்சர் (ஓய்வு), குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், தஞ்சாவூர் (நகரம்), தஞ்சாவூர் மாவட்டம் என்பவர் 04.03.1992 முதல் 10.04.1997 வரை எவ்வித தகவலுமின்றி பணிக்கு வராத 1864 நாட்களை அடிப்படை விதிகளில், விதி 5A-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தனியர் பொருட்டு விதி18(2)-ஐ தளர்த்தி, அடிப்படை விடுப்பு விதிகளில், விதி 85(b)-ன் கீழ் விதித்துளி 4-ன்படி "மருத்துவச் சான்றில்லா ஊதியமில்லா அசாதாரண விடுப்பாக" (Extra-ordinary Leave without Pay and Allowances without Medical Certificate) வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
திரு.M.A.மோகன்,
தட்டச்சர் (ஓய்வு),
குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம்,
தஞ்சாவூர் (நகரம்), தஞ்சாவூர் மாவட்டம்.
(சமூக நல இயக்குநர், சென்னை-15 வழியாக).
சமூக நல இயக்குநர், சென்னை-15.

இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், சென்னை–113.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18.
மாவட்ட திட்ட அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.

**நகல்:–**

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் – மகளிர் உரிமை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மனித வள மேலாண்மைத் (அ.வி.3) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

02/07/2021
பிரிவு அலுவலர்

2/7/21

4/5